செய்தி இதழாகப் பதிவு பெற்றது.

# தந்தி

இல: 1099 | 1970 ஆகஸ்ட் 4 | செவ்வாய்க்கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED 7-8 Periodicals Division

## பெண்கள், சிறுவர்கள், சிதறி ஓடினர்

# ஜிந்துப்பிட்டியில் எறி குண்டு வீச்சு

**கொழும்பு, ஜிந்துப்பிட்டி வீதியில் ஓர் எறி குண்டு பயங்கரச் சத்தத்துடன் வெடித்தது. இதனால் பெண்களும், சிறுவர்களும் பயந்து சிதறி ஓடினர். ஒரு பெண் காயமுடைந்தார். இரு சந்தேக நபர்களைத் தேடி பொலீஸார் வலை வீசி உள்ளனர்.**

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை இரவு நடைபெற்றது. இரவு சுமார் 10 மணியளவில் விக்டோரியா பெர்ணண்டோ என்ற ஒரு பெண்மீது இருவர் இந்த எறி குண்டை வீசியுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

குண்டு வெடித்தபோது ஜிந்துப்பிட்டி வீதியிலிருந்த பெண்களும், சிறுவர்களும் ஓடினர்.

இந்தச் சம்பவம்பற்றி கொட்டாஞ்சேனை பொலீஸில் நஸரேன் பீலிக்ஸ் பெர்ணண்டோ என்பவர் புகார் செய்துள்ளார். இதைத் தொடர்ந்து சப் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் ஒரு பொலீஸ் கோஷ்டி சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்தது.


காயமடைந்த பெண்ணைப் பொலீஸார் பெரியாஸ்பத்திரியில் விபத்துச் சேவைப் பகுதியில் அனுமதித்தனர். அங்கு அவர் சிகிச்சை பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த இடத்தை அரசாங்க இரசாயன பரிசோதகர் நேரில் பார்வையிட்டு குண்டு வெடித்தது சம்பந்தமாக பரிசோதனை நடத்துவதற்கான ஏற்பாடுகளைப் பொலீஸார் செய்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் தலைமறைவாகி உள்ளனர்.

இருசாராருக்கிடையே இருந்து வந்த பகையின் எதிரொலியாகவே இச் சம்பவம் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.

பொலீஸார் தொடர்ந்து புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.



விஜேபால ஹெட்டியாராய்ச்சியின் தயாரிப்பு — டைரக்ஷனில் உருவான புதிய சிங்களப் படம் ஒன்றில் நடிக்கும் அருணு கருணதிலக்காவின் ஒரு தோற்றம். இப்படம் விரைவில் திரையிடப்படும்.

## 137·3

கொழும்பு, ஆக. 4

கொழும்பு வாழ் பாவனையாளர்களின் ஜூலை மாதத்திய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 137.3 ஆகும்.

## அணுசக்தி நிலையம்

கல்விக்கும், ஆராய்ச்சி வேலைகளுக்கும் உபயோகிக்கவென இலங்கையில் அணுசக்தி நிலையம் ஒன்று நிறுவப்பட உள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட விஞ்ஞான ரீதியான தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெருந்தொகையானோர் இதனால் நன்மையடைவர். (ர)

மீனட்சி



என்னுடைய, பருப்பு, வெந்தயம், சீரகம், மிளகாய், மல்லி, மிளகு இவைகளின் விலைகள் குறைந்துவிட்டனவா?

ஆமாங்க டீ. ஆர்- பீக்கள் பலருக்கு இடமளிக்கும் வரைக்கும் மார்க்கட் விலை எதுவும் குறையாது!

## ஒருபோத்தல்கள்ளின்விலை பத்து சதத்தால் அதிகரிப்பு

நாளை முதல் ஒரு போத்தல் கள்ளின் விலை 10 சதத்தால் அதிகரிக்கும்.

இதன்படி இப்போது 60 சதமாக விற்கப்படும் ஒரு போத்தல் கள் நாளை முதல் 70 சதமாகும்.

பத்தாயிரம் சீவல் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதென சம்பள நிர்ணய சபை கடந்த வாரம் முடிவு செய்ததைத் தொடர்ந்தே கள்ளின் விலை ஏற்றம் கண்டுள்ளது.

இப்போது ரூபா 3-60 வீதம் விற்கப்படும் ஒரு கலன் கள்ளின் விலை நாளை முதல் ரூபா 4-20 ஆக அதிகரிக்கும்.

சம்பள நிர்ணய சபையின் முடிவை அடுத்து சீவல் தொழிலாளர்களுக்கு அதிக சம்பளம் கொடுப்பதால் ஏற்படும் நஷ்டம் கள் அருந்துவோரிடம் இருந்து இப்படியாகப் பெறும் பணத்தால் சரி செய்யப்படுகிறது.

கள்ளின் விலை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர். (ஐ)

## அரசியல் சட்டத் திருத்தம் மசோதா நிறைவேறியது

அரசியல் சட்டத் திருத்த மசோதா நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது- வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ளவில்லை.

வாக்கெடுப்புச் சமயத்தில் சபையில் சமுகமளித்திருந்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்களான திரு. எஸ்.ஜே-வி- செல்வநாயகம், திரு. வி. என். நவரத்தினம், திரு. தங்கத்துரை ஆகியோர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது மௌனம் சாதித்தனர்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களான திரு. ஆனந்த சங்கரி, திரு. சி. அருளம்பலம், திரு. தியாகராசா ஆகியோரார் அரசாங்கக் கட்சியுடன் சேர்ந்து வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய காலித் தொகுதி உறுப்பினர் டாக்டர் டபிள்யூ. தகநாயகாவும் அரசாங்க கட்சியுடன் சேர்ந்து ஆதரித்து வாக்களித்தார்.

அரசியல் சட்ட திருத்த மசோதா வாக்கெடுப்பின்போது மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று சகல நிலைகளிலும் நிறைவேறியது. (ஐ)

## சுவீப்

கொழும்பு. ஆக. 4

கொழும்பில் உள்ள தேசிய லொத்தர் சபை அலுவலகத்தில் நேற்று இழுக்கப்பட்ட 309-வது சுவீப் சீட்டிழுப்பில் முதல் மூன்று பரிசுகளும் பெறும் டிக்கெட்டுகளின் விபரம்!

முதலாம் பரிசு

**27 C 0921**

ரூபா 92,020

இரண்டாம் பரிசு

**13 G 0828**

ரூபா 36,808

மூன்றாம் பரிசு

**02 V 0291**

ரூபா 9,202

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண விசாரணையில் பகிரங்க தீர்ப்பு

# ரயில் பாதையில் கிடந்த யுவதியின் மரணத்தில் மர்மம்

"ரயில் பாதையில் கிடந்த சடலம் என்னுடைய மகளுடையது. இச் சம்பவம் நடைபெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் அக்னஸ் என்பவரின் வீட்டுக்குப் போக மகள் ஆரம்பித்தாள். அதை நான் அறிவேன். எனது மகளின் மரணம் குறித்து சந்தேகப்படுகின்றேன்."

மேபள் பேட் என்னும் யுவதியின் மரணம் சம்பந்தமாக உத்தியோகப் பற்றற்ற நீதவான் திரு. ஆர். விக்ரமசிங்ஹ நடத்திய விசாரணையில் பிரஸ்தா யுவதியின் தந்தையான பி. பேட் என்பவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜூலை மாதம் 26-ம் திகதி காலி – மாத்தறை ரயில் பாதையில் இந்த யுவதியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சாட்சி மேலும் கூறியதாவது:- "ஜூலை மாதம் 25-ம் திகதி உனவட்டுன என்னும் இடத்திலிருந்து காலிக்கு ரயிலில் செல்லும்போது, ரயில் பாதையருகே இருக்கும் அக்னஸின் வீட்டில் மேபளைக் கண்டேன். மேபளுக்கு சிறு பிள்ளையொன்றும் இருக்கின்றது."

வெள்ளவத்தையைச் சேர்ந்த எல். டெனி என்பவர் கூறியதாவது:– "ஜூலை மாதம் 25-ம் திகதி நள்ளிரவு அக்னஸின் வீட்டுக்கு வந்து பொலீஸார் கதவைத் தட்டினர். கதவு திறக்கப்படாததால் பொலீஸார் கதவை பலவந்தமாகத் திறந்து வீட்டினுள் நுழைந்து அக்னஸுடன் பேசினர்.

இச் சந்தர்ப்பத்தில் அவ் வீட்டில் வேறொரு பெண்ணும் இருந்தாள். இதுவே நான் அந்த வீட்டுக்குச் சென்ற முதல் தடவையாகும்.

அக்னஸுக்கு எதிராக விருந்து பிறப்பிக்கப்பட்டிருந்ததால் அன்றிரவு அக்னஸ் பொலீஸ் நிலையத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டார். பொலீஸ் நிலையத்துக்குச் சென்ற நான் அக்னஸக்கு தேநீர் எடுத்துக் கொடுத்தேன்.

விடியற்காலை 5 மணியளவில் வீட்டுக்குத் திரும்பும்போது ரயில் பாதையில் பலர் கூடி நிற்பதைக் கண்டேன். காலஞ்சென்றவரை நான் இதற்கு முன்னர் பார்த்தது கிடையாது."

மரண விசாரணையாளர் பகிரங்கத் தீர்ப்பளித்தார். (ர)

## பீடிக் கட்டால் முதியவர் ஒருவாரம்கம்பிஎண்ணுவார்

ஹொரணை, ஆக. 3

ஒரு கட்டு பீடியினலும் ஒரு தீப்பெட்டியினலும் 50 வயது முதியவர் ஒருவர் சற்றும் எதிர்பாராமல் திடீரென ஒரு வாரம் கம்பி எண்ண வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது.

பணபிட்டியைச் சேர்ந்த எல். சொலமன் பெரேரா என்பவருக்கே இந்நிலை ஏற்பட்டது.

ஏதோ ஒரு தேவைக்காக வீட்டில் இருந்து ஹொரணைக்குப் புறப்பட்ட இந்த முதியவர் இளைப்பாறுவதற்காக நீதிமன்றம் அருகே சென்றார். நீதிமன்றத்தில் கூட்டம் நிறைந்திருக்கவே நீதிமன்ற மதில் மீது ஏறி அமர்ந்து விசாரணையை கவனிக்கத் தொடங்கினர்.

கொஞ்ச நேரத்தின் பின்னர் நீதிமன்ற விறுந்தையில் இருக்கும் குட்டைச் சுவரில் குந்தினர். சந்தேக நபர்களை அடைத்து வைக்கும் மறியல் கூடு அருகிலேயே இருந்தது.

கொஞ்ச நேரம் செல்லவே அங்கு வந்த ஒரு பொலீஸ்காரர் அந்த முதியவரைப் பிடித்து மறியல் கூண்டில் தள்ளினர்.

சில விநாடிகள் கழிந்திருக்கும். சொலமன் பெரேரா என நீதிமன்றத்தில் பெயர் கூப்பிடப்பட்டது. பொலீஸ்காரரால் அவர் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

மறியலில் இருந்த ஒரு சந்தேக நபருக்கு பீடியும் தீப்பெட்டியும் கொடுத்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

சொலமன் பெரேரா குற்றத்தை ஒப்புக் கொள்ளவே நீதவான் ஒருவார கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். (ர)

## பணம் பறிக்கும் கோஷ்டி கண்டி நகரில் கைவரிசை

கண்டி, ஆக. 3

கண்டி நகருக்கு படையெடுத்திருக்கும் காடையர் கூட்டமொன்று வியாபார நிலையங்களிலும் தனி நபர்களிடமும் பணம் பறிப்பதை ஆரம்பித்துள்ளது.

தங்களைப் பற்றி பொலீஸில் புகார் செய்தால் கொலை செய்வதாக இக் காடையர். கூட்டம் பயமுறுத்தியிருப்பதால் இவர்களிடம் பணத்தையும் பொருளையும் பறி கொடுப்போர் பொலீஸில் புகார் செய்ய அஞ்சுகின்றனர்.

கடந்த வாரம் இக்காடையர் கூட்டம் தனியொருவர் இருந்த சுருட்டுக் கடையொன்றில் கைவரிசை காட்ட முயன்ற சம்பவம் நடைபெற்றுள்ளது.

அக்கடைக்காரர் கப்பம் கொடுக்க மறுக்கவே ஆத்திரம் கொண்ட காடையர்கள் அவரைத் தாக்க முற்பட்டனராம். அவ்வழியால் சென்ற சிலரின் தலையீட்டால் அசம்பாவிதங்கள் நடை பெறுவது தடுக்கப்பட்டது. மறுநாள் கடைக்காரின் புகாரை அடுத்து கண்டி பொலீஸார் இக் கூட்டத்தைச் சேர்ந்த இருவரை விசாரணையின் பின்னர் விடுவித்தனர்.

கண்டி சந்தை, பஸ் நிலையம், தலதா மாளிகாவை, குயீன்ஸ் ஹோட்டல் ஆகிய இடங்களிலே இவர்கள் அடிக்கடி காணப்படுகின்றனர். (ர)

## உணவில் விஷம்

மாத்தளை, ஆக. 3

மாத்தளையைச் சேர்ந்த ஓர் வர்த்தக நிறுவனத்தின் ஊழியர்கள், உணவில் விஷம் கலக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவமொன்றை அடுத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் பதினைந்து பேரது நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இச் சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடாத்துவதற்கான ஒழுங்குகளை மாத்தளை அரசாங்க அதிபர் மேற்கொண்டார். இது குறித்து மாத்தளைப் பொலீசார் தற்சமயம் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர். (ர-7)

## இ. போ. ச. பஸ் பலி எடுத்தது

கண்டி, ஆக. 3

கண்டி, பேராதனை ரூட்டைச் சேர்ந்த 85 வயதுடைய எம். பாத்தும்மா என்னும் பெண் இ. போ. ச. பஸ்ஸினல் மோதப்பட்டு கொல்லப்பட்டார்.

இம் மரணம் சம்பந்தமாக கண்டி பதில் நீதவான் விசாரணை நடத்தி பஸ் சாரதியை பிணையில் விடுதலை செய்தார். (ர)

## படகு விபத்தில் 94 பேர் பலி

சென்.கிட்ஸ், ஆக. 3

மேற்கு இந்திய தீவுகளுக்கு அருகில் பாதைப்படகு ஒன்று விபத்துக்குள்ளாகியதால் மூன்று கன்னியாஸ்திரிகள் உட்பட 94 பேர் கொல்லப்பட்டனர்.

விபத்துக்குள்ளான பாதைப் படகில் 220 பேர் பிரயாணம் செய்தனர். காணமற்போன 100 பேரைத் தேடும் முயற்சிகள் தற்பொழுது கைவிடப்பட்டுள்ளன.

## உல்லாசப் பிரயாணம் வந்து 'பிஸினஸ்' நடத்தும் சுந்தரிகள்

சிங்கப்பூர், ஆக. 3

வெள்ளை அடிமைப் பெண்களின் குழு ஒன்று சிங்கப்பூரில் தொழில் புரிந்து வருவதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து குடியிருப்பு பகுதியிலுள்ள பல அடுக்குமாடி வீடுகளில் விபச்சார ஒழிப்புப் பிரிவினர் தீவிர வேட்டையில் இறங்கினர்.

சோதனை நடத்தப்பட்ட மூன்று வீடுகளும் விபசார விடுதியாகப் பயன் படுத்தப்பட்டு வந்தன என்பதற்குப் பொலீஸாருக்குப் போதுமான ஆதாரம் கிடைத்திருக்கிறது.

உல்லாச பிரயாணிகள் போல சிங்கப்பூருக்குள்வந்து இத்தகைய இடங்களில் "தொழில்" நடத்தும் வெளி நாட்டுப் பெண்கள் இனி நெருக்கமாகக் கண்காணிக்கப்படுவர்.

வயதில் குறைந்தவர்களாக இல்லாத பெண்களை விபசாரத்திலிருந்து மீட்க சட்டத்தில் போதிய அதிகாரம் இல்லை. விசாரிக்கப்பட்ட எல்லாப் பெண்களும் தாங்கள் 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பதை நிருபித்தனர்.

25 வயதுள்ள ஆஸ்திரேலியப் பெண் ஒருத்தி. அடுக்குமாடி வீடு ஒன்றில் அகப்பட்டாள்.

தனது அனுபவத்தை அந்த ஆஸ்திரேலிய நங்கை அதிகாரிகளிடம் விவரித்தாள்.

வந்து சேர்ந்த முதல் வாரத்தில், சிங்கப்பூரிலுள்ள முதல் வகுப்பு ஒட்டல் ஒன்றில் அவள் தங்கினள். ஆனல் அதன் உயர்ந்த கட்டணம் அவளுக்கு கட்டுப்படியாகவில்லை. ஆகவே லாம் அம்மையார் என்று கூறப்படும் ஒரு மாதுக்குச் சொந்தமான அடுக்குமாடி வீட்டை ஒரு நாளைக்குப் 15 வெள்ளி வாடகைக்குப் பிடித்தாள்.

அடுக்குமாடி வீடுகள் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு கிடைக்கும் என்ற தகவலை, சிட்னியில் தனக்குத் தெரிந்த ஹங்கேரி பெண் ஒருத்தி கூறியதாக அந்த ஆஸ்திரேலிய மாது கூறினள்.

சில போலி நிதியுதவி நிறுவனங்கள் இந்த விபசாரிகளை வைத்து அனைத்துலக "நாணயச் செலாவணி" வியாபாரத்தையும் நடத்துவதாகத் தெரிகிறது.

மலேசியத் தலைநரிலும் இந்த மாதர்களின் நடமாட்டம் இருப்பதாகத் தெரிய வருகிறது.

வெளிநாட்டுப் பெண்கள், இங்குள்ள பிரபல விபசார விடுதிகளில் தங்குவதில்லை. பிரபல ஒட்டல்களில் தங்கிக் கொண்டு, விபசாரத் தரகர்கள் மூலம் ஆள் பிடிக்கின்றனராம். வாடிக்கையாளர்களுக்கு அந்தத் தரகர்கள் விசேட வியாபாரக் கார்டுகளை வழங்குகின்றனராம். அந்தக் கார்டுகளைக் கொண்டு வருபவர்களுக்குத்தான் அந்தப் பெண்கள் தங்களை வழங்குவர். (ர)

## மாமியை மருமகன் கடத்தினன்

சாவகச்சேரி, ஆக. 3

மாமனின் ஆசை நாயகியை மருமகன் கடத்திச் சென்று காட்டினுள் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாரும். முரசு மோட்டைப் பகுதியில் இச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. (51)


### நடவடிக்கை எடுக்கவும்

உள்ளூர் உற்பத்தி அரிசிமார்க்கெட்டில் வந்து விற்கின்றது- பலரும் வாங்குகின்றார்கள்- ஆனல் அதன் விலையோ சந்தர்ப்பத்துக்கு ஏற்றுப்போல இருக்கின்றது- கூப்பன் கடையில் வெள்ளை அரிசி கொடுத்தவுடன் பத்து இருபது என்று விலை ஏறிவிடும்- மழை பெய்தால் இருபது முப்பது என்று விலை அதிகரித்துவிடும்- இந்தக் கொள்ளையை நடத்துபவர்கள் யாவர்? அரிசி வியாபாரிகளும், அவர்களுக்கு அரிசியை விவசாயியிடமிருந்து வாங்கிக் கொடுக்கும் தரகர்களும்தான்- விவசாயிகளுக்கு முற்பணத்தைக்கொடுத்து அரசாங்கத்துக்கு உத்தரவாத விலைக்கு அவைகளை விற்க விடாது, பொது மக்களை கொள்ளையடிக்கும் இந்தப் பத்காப் பெருச்சாளிகளை வழிக்குக் கொண்டு வருவதற்கு மக்கள் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்காவிட்டால் உள்நாட்டு அரிசி விலை எந்தக் காலமும் குறையாது என்பது உறுதி-

தந்தி

விளம்பரம் செய்வதினல் வியாபாரம் விருத்தியடையும்

தந்தி
சிறு விளம்பரங்கள்

### வசியம்

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவருத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.

R. 69428


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் பிடியில் இருந்து தப்பியவருக்கு கோர்ட்டுக்கு வெளியே ஆண்களும் பெண்களும் உதை

ஒரு பெண்ணை நிர்க்கதிக்கு உள்ளாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், போதிய சாட்சியம் இல்லாததால் நீதிமன்றத்தில் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிய போதிலும் நீதிமன்றத்துக்கு வெளியில் கூடி நின்ற கூட்டமொன்றின் பிடியிலிருந்து தப்ப முடியாது போய்விட்டது.

ஏழு வருடங்களாக காதலித்து வந்த பெண்ணைத் திருமணம் செய்வதாக உறுதியளித்து, இன்பம் கண்டு அவள் கர்ப்பவதியானதும் அவளைக் கைவிட்டதாக குற்றம் சாட்டி ஒரு நபர் மீது தொடரப்பட்ட வழக்கு கொழும்பு முனிசிபல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட பின்னரே இச்சம்பவம் நடந்தது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

19 வயதுடைய பிரேமா என்னும் யுவதி தெனியாய பகுதியைச் சேர்ந்த பத்திரன என்னும் வாலிபனைக் காதலித்து வந்தார்.

இவர்களின் காதல் உறவால் பிரேமா கர்ப்பவதியானாள். இதற்கிடையில் கொழும்பில் ஒரு வேலை கிடைக்கவே பத்திரன கொழும்புக்கு வந்து விட்டார்.

காதலனைப் பிரிந்த காதலி தனது காதலை கடிதத்தில் வடிக்கத் தவறவில்லை. மகள் கர்ப்பமுற்றாள் என்பதையறிந்த பெற்றோர் அவளை வெறுத்து வீட்டை விட்டு விரட்டினர்.

வாழும் வழியறியாத பிரேமா, வயிற்றில் பிள்ளையையும் சுமந்து கொண்டு காதலனைத் தேடி கொழும்புக்கு வந்தாள். வந்த இடத்தில் காதலனையும் கண்டாள்.

திருமணம் செய்வதாக மீண்டும் உறுதியளித்த பத்திரன அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து பிரேமாவுடன் ஒன்றாக வாழ்ந்தார். ஆனால் அதுவும் சில மாதங்களே நீடித்தன. மீண்டும் பிரேமா கைவிடப்பட்டாள்.

நடுத்தெருவில் கைவிடப்பட்ட பிரேமா இறுதியில் பொலீஸ் வலையில் சிக்கினாள். பொலீசில் நடந்ததைக் கூறவே, இந்த ஜோடி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டது.

நீதவான் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்ட பத்திரன, பிரேமாவைத் திருமணம் செய்வதாக உறுதியளிக்கவே நீதவான் அதற்கு அவகாசம் அளித்தார்.

மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரான பத்திரன தான் பிரேமாவைத் திருமணம் செய்ய முடியாது என்றும், ஆனால் ஜீவனாம்சம் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

தார். பத்திரனையைத் தண்டிக்க சட்டத்தில் வழியிருக்காததால் அவர் தப்பிக் கொண்டார்.

வழக்கு விசாரணையைப் பார்த்துக் கொண்டிருந்த ஆண்களும், பெண்களும் நீதிமன்றத்திற்கு வெளியில் பத்திரனையைத் தண்டிக்கத் தயங்கவில்லை. வெளியில் வந்த பத்திரனையை கைகளாலும் கால்களாலும் தாக்கினர்.

இது பற்றி பொலீசில் புகார் செய்து விட்டு பத்திரன கம்பி நீட்டவே, பிரேமா அனாதை இல்லத்துக்கு அனுப்பப்பட்டார். (ர)

## 30 வயது தாய் காளையுடன் ஓட்டம்

சாவகச்சேரி, ஆக. 3

தனது பதினைந்து வயதுப் பருவ மங்கையான மூத்த பெண்ணையும், ஏனைய ஐந்து பிள்ளைகளையும் தவிக்கவிட்டு, 30 வயதுத் தாய் ஒருத்தி 18 வயதுக் காளையுடன் கம்பி நீட்டிய சம்பவம் ஒன்று தருமபுரம் பகுதியில் நடை பெற்றுள்ளது. (-51)

## பெண்ணைக் கடத்திச் சென்று கற்பழிக்க முயன்றார்களாம்

திருகோணமலை, ஆக. 3

கணவனைத் தேடி தம்பியுடன் மூதூர் வந்த ஒரு இளம் பெண்ணை கடத்திச் சென்று கானகத்தில் வைத்து கற்பழிக்க முயன்றார்களாம் இருவர்.

இத் தகவல் திருகோணமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யு. விக்ரமசேகரா முன்னிலையில் விசாரணைக்கு வந்த வழக்கு ஒன்றில் வெளியானது.

சிறியலதா என்ற பெண்ணைக் கடத்திச் சென்று பயமுறுத்தியதாக காணி அபிவிருத்தி அலுவலக ஊழியர் இருவர் மீது மூதூர் பொலீஸார் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

விசாரணையில் சிறியலதா சாட்சியமளித்தார். அப்பொழுது அவர் கூறியதாவது:—

"சேருவில கிராமத்தில் வாழும் எனது கணவனைத் தேடி குருணாகலையில் இருந்து தம்பியுடன் மூதூர் வந்தேன்.

சம்பவ தினம் மாலை மூதூரை அடைந்தேன். இருட்டிவிடவே தேங்காய்ச் சிரட்டை ஒன்றில் மெழுகுவர்த்தி ஒன்றைப் பற்ற வைத்து கணவனின் சகோதரனை பெலீஸ் என்பவரின் வீட்டை நோக்கிச் சென்றேன்.

அச் சமயம் இரண்டு நபர்கள் எதிரே இருந்து வந்தனர். எங்கே போகிறீர்கள் என்று கேட்டனர். குருணாகலையில் இருந்துவரும் விடயத்தைத் தெரிவிக்கவே இரண்டு நபர்களும் சென்றனர்.

பின்னர் சிறிது நேரத்தில் அந்த நபர்கள் இருவரும் மீண்டும் திரும்பிவந்தனர். அவர்கள் என் மீது சந்தேகம் தோன்றியுள்ளதாகத் தெரிவித்தனர்.

இக் கட்டத்தில் இரண்டாவது எதிரி கத்திபோன்ற ஒன்றைக் காட்டி தம்பியைப் பயமுறுத்தினார். முதலாவது எதிரி என்னைப் பிடித்து காட்டுக்குள் இழுத்துச் சென்றார். தம்பி பயத்தில் ஓடிவிட்டான்.

பின்னர் முதலாவது எதிரி என்னை வேலி ஒன்றின் மேலால் தூக்கி இழுத்துச் சென்று பயமுறுத்தினார். அப்போது 2-வது எதிரி டோர்ச் லைட் வெளிச்சம் தெரிவதாக 1-ம் எதிரிக்குச் சொன்னார். அவ்வளவுதான், இரண்டு எதிரிகளும் என்னைவிட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

இரண்டு எதிரிகளும் சுற்றவாளிகள் என்றனர்.

இரண்டு எதிரிகளையும் குற்றவாளிகளாகக் கண்ட நீதவான் தலா 100 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பு அளித்தார். (ர-287)

## அற்புதம் காட்டுவதாக கூறி உயிரைவிட்டார்

ஜோர்டான், ஆக. 3

அற்புதம் புரிவதாகக் கூறி பலர் முன்னிலையில் தனக்குத் தானே தீமூட்டிக் கொண்ட ஒருவர், மூன்று நாட்களின் பின்னர் காலமானார்.

உயிருக்குப் போராடும் நிலையில் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும் மூன்று நாட்களாகவும் சுய நினைவுடனேயே இருந்தார். ஆனால், இறுதி நாள் நினைவிழந்த அவர் சிறிது நேரத்தில் மரணமானார்.

கடவுளிடம் இருந்து தனக்கு செய்தி கிடைத்திருப்பதாகவும் அற்புதம் செய்யப் போவதாகவும் கூறி ஆட்களைத் திரட்டிய அந் நபர். உடம்பில் பெட்ரோலை ஊற்றி தீ மூட்டினார்.

தீயை அணைத்த கூட்டத்தினர் அவரை ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தனர். (ர)

## வீரர்கள் பலி

சைகோன், ஆக. 3

தென் வியட்நாமின் வட பகுதியில் நேற்று நடைபெற்ற சண்டைகளில் 30 வட வியட்நாமியர் கொல்லப்பட்டதாக சைகோனில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குவாங்ரின் மாகாணத்தில் நடைபெற்ற மற்றொரு சண்டையில் 15 கெரில்லாக்கள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கத் துருப்புகளுக்குச் சேதம் குறைவு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

பழிவாங்கப்பட்ட

## தோட்டத் தொழிலாளர் நன்மைபெறும்காலம்வரும்

தெமோதரை, ஆக. 3

பஞ்சப்படி போராட்டத்தில் பங்குபற்றியதற்காக முதலாளிமார்களால் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் நிலைமை உருவாகும்.

ஐ. தொ. கா. தலைவரும் நியமன எம். பி.யுமான ஜனாப் ஏ. அஸீஸ் தெமோதரையைச்சேர்ந்த ஓதம்பைத் தோட்டத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"இன்றைய அரசாங்கத்தில் தொழிற்சங்கத் தலைவர்களே முக்கிய பங்கினை வகிக்கின்றார்கள். இதனால் தொழிலாளர்களுக்கு நல்லதொரு பாதுகாப்பு கிடைத்துள்ளது. இத்தகைய நிலைமை நமது வரலாற்றிலேயே நிகழ்ந்ததில்லை.

தோட்டத் தொழிலாளர்கள். தனியார்துறை ஊழியர்கள் சம்பந்தமாக அரசு கமிட்டி நியமித்துள்ளது. இதன்படி, தொழிலாளர் சாசனம் ஒன்றினைத் தயார் செய்யவும், தொழிலாளருக்குப் பாதுகாப்பளிக்கும் பல சட்டங்களை ஆக்கவும், தொழிலாளர்களுக்கு இதுவரை இன்னல் தந்த சட்டதிட்டங்களை அகற்றவும், வழி பிறக்கும்.

தோட்டத் தொழிலாளர்கள் இப்பொழுது வாரத்திற்கு ஆறு நாள் வேலையின்றி அல்லலுற்று வருகின்றனர். தொழிலமைச்சரோடு இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகளை ஐ. தொ. கா. மேற்கொண்டுள்ளது.

ஐ. தொ. காவையும் அதன் கொள்கைகளையும், அரசாங்கத்திற்கு அது நல்கி வரும் ஆதரவையிட்டும் பொறாமை கொண்ட சிலர் தான்தோன்றித்தனமாகப் பேசி வருகின்றனர். ஐ. தொ. கா. ஒரு சந்தர்ப்பவாத சங்கமல்ல. என்றும் அது இடதுசாரிப்போக்குடையது.

வலதுசாரி முதலாளித்துவக் கட்சிகளோடு அது கூட்டுச் சேர என்றும் விரும்பியதில்லை. அதற்குக் காரணம் முதலாளித்துவக் கட்சிகளால் நாட்டு மக்களுக்கும். குறிப்பாகத் தோட்டத் தொழிலாளருக்கும் எந்த விதமான நன்மையும் கிடைக்காது என்பதை ஐ. தொ. கா. உணர்ந்து வந்துள்ளது.

பதுளை மாவட்ட ஐ. தொ. கா. தலைவர் திரு. எம். எஸ். தங்கவேல் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் திரு. வி. பி. கணேசன். அரசியற் செயலாளர் திரு. ஏ. எஸ். முஸ்தபா ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (ர)


## மின்னுவதெல்லாம் பொன்னல்ல!

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து. வாழ்க்கையில் வெற்றியடைந்த குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ கடையிலோ

**ஸ்ரீ ராம வாசனைப் புகையை**

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்

**நீலன் கந்தசாமி,**

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட நடவடிக்கை எடுக்க ஒழுங்கு

# இன்சூரன்ஸ் அதிகாரி இலஞ்சம் வாங்க முயன்றாராம்

இலஞ்சம் வாங்கிய தாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவரை இலஞ்ச ஒழிப்புக் கமிஷனர் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மோட்டார் விபத்தொன்றில் சிக்கிய ஒருவருக்கு நஷ்டஈடாக 2000 ரூபா பெற்றுக்கொடுக்க அந் நபரிடம் 2000 ரூபா இலஞ்சமாகக் கேட்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

குனேமுல்லையைச் சேர்ந்த ஒருவர் செய்துகொண்ட முறைப்பாட்டை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னரே இந்த அதிகாரி கைது செய்யப்பட்டார்.

மோட்டார் விபத்தொன்றில் சிக்கியதால் தான் கடுமையான காயங்கள் அடைந்ததாகவும் நஷ்ட ஈடு கோரும் விண்ணப்பத்தைச் சிபார்சு செய்ய தனக்கு 2000 ரூபா செலுத்தவேண்டும் என அந்த அதிகாரி தெரிவித்ததாகவும் முறைப்பாட்டுக்காரரின் மூலம் அறியப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஒழுங்குகளை இலஞ்ச ஒழிப்புக் கமிஷனர் திணைக்களம் இப்போது செய்துவருகின்றது. (ர)

## தேர்தலும் பூசணிக்காயும்

தஞ்சாவூர், ஆக. 3

தென் இந்தியாவில் உள்ள தஞ்சாவூரில் பூசணிக்காய்க்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் அங்கு அண்மையில் நடைபெற்ற கிராம சபைத் தேர்தல்கள் தான்.

தேர்தலில் போட்டியிட்டவர்களில் பலர் பூசணிக்காயைத் தமது சின்னமாகக் கொண்டிருந்தனர்.

பூசணிக்காய் சின்னத்துடன் போட்டியிட்டவர்களின் ஆதரவாளர்கள் சந்தைகளிலும், மரக்கறிக் கடைகளிலும் இருந்த பூசணிக்காய்களை வாங்கி விட்டபடியால் தட்டுப்பாடு ஏற்பட்டது.

வாக்காளர்களைக் கவருவதற்காக வாக்குச் சாவடிகளுக்கு அருகில் இவர்கள் பூசணிக்காய்களைக் குவித்து விட்டனர்.

தேர்தலுக்கு முன் ஒரு ரூபா விற்ற பூசணிக்காய், தேர்தலுக்குப் பின்னர் 6 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. (5)

## சேலை தீப்பிடித்தது பெண் மரணம்

கண்டி, ஆக. 3

சேலையில் தீப்பற்றியதால் எரி காயங்களுக்கு உள்ளான ஒரு பெண் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

மஹியாவை, மாநகர சபை வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த வெள்ளையன் சுப்பம்மா என்ற பெண்ணே மரணமடைந்தவராவார்.

இறந்தவர் வழக்கமான வீட்டு வேலைகளை கவனித்துக்கொண்டு இருந்தபோது, குப்பி விளக்கின் தீ சேலையில் பற்றிக் கொண்டதாம். (ர-7)

## "புதுப் பெண்ணைத் தேடி என்னை விட்டுச் சென்றார்"

"எனது கணவர் என்னைக் கைவிட்டு புதிய மணப் பெண்ணுடன் புது வீட்டில் குடியேறிவிட்டார். எனக்கும் என் பிள்ளைகட்கும் ஒரு சதமேனும் வழங்காமல் அவர் புது மனைவியுடன் கொஞ்சிக் குலாவுகிறார்."

கொழும்பு நீதவான் திரு. ஆர். பி. டி. ஜெயசேகரா முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்ட தாபரிப்பு வழக்கொன்றில் முறைப்பாட்டுக்காரரான பெண் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்குளிய பேர் குஷன் வீதியைச் சேர்ந்த கருணவதி என்ற பெண் தனக்கும் தனது ஐந்து பிள்ளைகளுக்கும் கட்டவேண்டிய தாபரிப்புப் பணத்தில் பாக்கி 400/- ரூபாவை தனது கணவனை அபயசிங்ஹ பண்டா என்பவரிடமிருந்து பெற்றுத் தரும்படி கோரி இவ் வழக்கைத் தாக்கல் செய்து உள்ளார்.

நீதாவன்: (எதிர் மனுதாரரை நோக்கி) ஏன் நீர் தாபரிப்புப் பணம் செலுத்தவில்லை? நீதிமன்றத் தீர்ப்பை உதாசீனம் செய்வது பாரதூரமான குற்றம் என்பது உமக்குத் தெரியாதா?

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்: எனது கட்சிக்காரர் இத்தொகையைச் செலுத்த மிகவும் கஷ்டப்படுகிறார். அவரது மாதாந்த் வருமானம் 150 ரூபாதான். இன்று அவர் 150 ரூபா செலுத்துவதற்கு ஆயத்தமாகவுள்ளார்.

மனுதாரின் வழக்கறிஞர்: எனது கட்சிக்காரர் இந்தச் சிறிய தொகையை வைத்து என்ன செய்ய முடியும். எதிர் மனுதார் ஓர் துறைமுகத் தொழிலாளி. அவருக்கு மாதாந்த வருமானமாக 300 ரூபாவிற்குக் குறையாமல் கிடைக்கும்.

எதிர் மனுதார் 150 ரூபா செலுத்துகிறேன் எனக் கூறியதை நீதவான் ஏற்று மிகுதிப் பணத்தை ஆகஸ்ட் 14-ம் திகதிக்கு முன்னர் செலுத்தும்படி தீர்ப்பளித்தார். (ர-7)

## சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 460-10 சதம் அடங்கிய 100 ஆறுதல் பரிசுகள் பெறும் டிக்கெட்டுகளின் விபரம்:

A
28 A 0310 23 A 0973
30 A 0533 27 A 0595
14 A 0742

B
13 B 0975 16 B 0063
15 B 0398 20 B 0002
32 B 0230 37 B 0018
05 B 0846

C
38 C 0556 36 C 0181
13 C 0985

D
07 D 0979 17 D 0995
35 D 0133 04 D 0312
01 D 0864 24 D 0198
12 D 0180

E
30 E 0083 20 E 0949
22 E 0483 05 E 0118

F
15 F 0310 18 F 0037
08 F 0871

G
09 G 0944 25 G 0950
07 G 0023

H
10 H 0335 27 H 0029
05 H 0664 32 H 0538
19 H 0906 10 H 0019
04 H 0353

J
06 J 0806 06 J 0510
06 J 0814

K
24 K 0411 34 K 0059

L
34 L 0915 31 L 0356
31 L 0460 09 L 0905
03 L 0557

M
35 M 0646

N
25 N 0930 16 N 0855
11 N 0997 26 N 0996
04 N 0424

O
32 O 0987 22 O 0165
09 O 0310 07 O 0635

P
13 P 0770 37 P 0077
23 P 0263 13 P 0612

Q
08 Q 0717 01 Q 0767
22 Q 0225 09 Q 0572

R
22 R 0382 16 R 0580
16 R 0148 30 R 0976
35 R 0909 15 R 0128

S
37 S 0883 20 S 0099
19 S 0967 37 S 0660

T
02 T 0704 03 T 0201
22 T 0410 27 T 0504

U
16 U 0075 35 U 0565
35 U 0843 25 U 0922
24 U 0348

V
26 V 0838 29 V 0549
06 V 0171

W
20 W 0604 26 W 0528

X
23 X 0480 06 X 0145
07 X 0713 29 X 0230
11 X 0207

Y
10 Y 0679 19 Y 0650

Z
24 Z 0669 18 Z 0275

## ஐ. தே. கட்சியில் இருந்து தஹநாயக்கா ராஜினமா

காலி எம். பி. யான டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும், எதிர்க் கட்சி நாடாளுமன்றக் குழுவிலிருந்தும் நேற்று ராஜினமாச் செய்தார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நடைபெற்ற காரசாரமான விவாதத்தின் பின்னரே டாக்டர் தகநாயகா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தும் எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுவிலிருந்தும் ராஜினமாச் செய்தார்.

பிரஸ்தாப நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா தலைமையில் நாடாளுமன்றக் கட்டட அறையில் நடைபெற்றது.

இப்போது நடைமுறையில் உள்ள அரசமைப்புச் சட்டத்தின் 13-வது பிரிவைத் திருத்த அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதென டாக்டர் தகநாயகா முடிவு செய்ததைத் தொடர்ந்தே அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ராஜினமாச் செய்தார் என அறியப்படுகிறது.

எம். பிக்களின் தகுதியை நிர்ணயிக்கும் பிரஸ்தாப 13-வது பிரிவைத் திருத்துவதை எதிர்ப்பதென ஐக்கியதேசியக் கட்சி முன்னர் முடிவு செய்திருந்ததாம்.

அந்த முடிவுபற்றித் தமக்குத் தெரியாதெனவும், இது சம்பந்தமாக அங்கத்தவர்கள் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப வாக்களிக்க அனுமதி அளிக்க வேண்டுமென்றும் டாக்டர் தகநாயகா நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பிரஸ்தாப திருத்தத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்றும் எம். பிக்கள் விருப்பத்துக்கு ஏற்ப வாக்களிக்க முடியாது என்றும் தீர்க்கமாக முடிவு செய்தனர். (ர)

## ஜி. ஜி. கூட்டம் கூட்டுகிறார்

சிறுபான்மை இனத்தவர்களுக்காக என்னென்ன அடிப்படை உரிமைகள், பாதுகாப்புகள் புதிய அரசியலமைப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்பதை ஆராய்வதற்காக தமிழ்த் தலைவர்களின் கூட்டம் ஒன்றை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூட்டியுள்ளார்.

இக் கூட்டம் இம்மாதம் 9-ம் திகதி கொழும்பு செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடைபெறும். (ர)


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கபபடுகிறது.

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

S. P. S. ஜெயம் அன் கோ.

மதுரை - கொழும்பு.

தபால் பெட்டி 1298.
தொலைபேசி என். 26584






## அன்பும் காதலும்

நிரந்தரமாவதற்கு, வேண்டியவர்களை அடைவதற்கு, வேண்டாதவர்களை தவிர்ப்பதற்கு, திருமணம் நடைபெறுவதற்கு, கொடியவர்களை அடக்குவதற்கு, பரீட்சைகளில் சித்தியடைவதற்கு, வழக்கு என்பனவற்றில் வெற்றியடைவதற்கு, நோய் பீதி ஒழிந்து, முன்னேற்றத்திற்கு வழி செய்து கொடுக்கப்படும்.

எழுதுங்கள் அல்லது நேரில் சந்தியுங்கள்.

அரசாங்க அனுமதி பெற்ற குப்த விஞ்ஞானரீதி

**பி. எம். திஸ்ஸாநாயக்க,**

103, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, மருதானை.

தொலைபேசி: 33955.


இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை வெளியிட்ட திகதி 4 ஆகஸ்ட் 1970
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org